

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.10.2024) தலைமைச் செயலகத்தில், தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களாக தரம் உயர்த்தப்பட்ட அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று முதல் ஆண்டிலேயே அகில இந்திய தொழிற் தேர்வில், இந்திய அளவில் பல்வேறு தொழிற் பிரிவுகளில் முதலிடம் பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 29 மாணவ, மாணவியர்களும் மற்றும் காட்டுமன்னார் கோவில் அரசினர் தொழிற் பயிற்சி நிலைய பயிற்றுநர் ஒருவரும் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை செயலாளர் கொ. வீர ராகவ ராவ், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் பா.விஷ்ணு சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### விடுதலை –

# தியாகத்தின் அடையாளம் மருது சகோதரர்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, அக். 26-**

**விடுதலை வீரர்கள் மருது பாண்டியர்களின் நினைவு நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், “சிவகங்கைச் சீமையின் தீரர்களான மருதிருவரைப் போற்றுகிறேன் என்றும், விடுதலை மற்றும் தியாகத்தின் அடையாளங்களாக வாழ்ந்த மருது சகோதரர்களின் போராட்டமும், வீரமும் மக்கள் மனங்களில் என்றும் வாழும்” எனவும் புகழாரம் சூட்டியுள்ளார்.**

அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்த விடுதலை வீரர்கள் மருது பாண்டியர்களின் நினைவு நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

அந்நியரின் ஆதிக்கத்தை எதிர்த்து நின்ற சிவகங்கைச் சீமையின் தீரர்களான மருதிருவரைப் போற்றுகிறேன்!

விடுதலை மற்றும் தியாகத்தின் அடையாளங்களாக வாழ்ந்து, இந்த மண்ணுக்கு உரமாகியுள்ள மருது சகோதரர்களின் போராட்டமும் வீரமும் மக்கள் மனங்களில் என்றும் வாழும்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### யாரும் அச்சப்படத் தேவையில்லை!

# தலைமைச் செயலகம் உறுதியாக உள்ளது!

### நேரில் ஆய்வு செய்து - பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு பேட்டி!



சென்னை, அக்.26-

தலைமைச் செயலகம் அமைந்துள்ள நாமக்கல் மாளிகை உறுதியாக இருப்பதாகவும், சேதம் அடைந்த ஓடுகள் புதுப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் எ.வ.வேலு கூறினார்.

சென்னை தலைமைச் செயலகத்தின் முதல் மாடியில் சேதம் அடைந்த பகுதியை பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு செய்தார்.

பின்னர் அவர் கூறியதாவது:-

நாமக்கல் கவிஞர் மாளிகை 1974-ஆம் ஆண்டு கட்டப்பட்டது. முதல் தளத்தில் செயல்பட்டு வரும் விவசாயத்துறை அலுவலகத்தின் தரையில் 14 ஆண்டுகளுக்கு முன்னர் ஓடுகள் பதிக்கப்பட்டன. அதனால் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இது சாதாரண விரிசல் தான். அதை சரிசெய்ய பொதுப்பணித்துறைக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. கட்டிடத்தின் உறுதித்தன்மையை நாங்கள் ஆய்வு செய்தோம். அது உறுதியாகத்தான் உள்ளது. ஊழியர்கள் யாரும் அச்சப்பட வேண்டாம். அனைவரும் பணிக்கு திரும்ப வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு கூறினார்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 101 அடியாக உயர்வு!

மேட்டூர், அக்.26-

தமிழ்நாடு, கர்நாடகா காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையின் காரணமாக கடந்த சில நாட்களாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து காணப்படுகிறது. இதன் காரணமாக அணையின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் காலை நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 101.40 அடியாக உயர்ந்து காணப்பட்டது.

அணைக்கு 29 ஆயிரத்து 307 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்தது. அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு 7500 கனஅடியும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு 600 கன அடியும் திறக்கப்பட்டு வருகிறது. அணையில் 66.66 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது.



ஈரோடு மாவட்டம் கதிரம்பட்டி ஊராட்சி, பெரும்பள்ளம் ஓடை கரையில் ஒரு லட்சம் பனை விதைகள் நடும் பணியினை பனைமர தொழிலாளர் நலவாரிய தலைவர் எர்ணாவூர் எ.நாராயணன் தலைமையில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ், கழக நெசவாளர் அணி செயலாளர் சிந்து ரவிச்சந்திரன், ஒன்றிய பெருந்தலைவர் பேரோடு பிரகாஷ், பெருந்துறை பி.சங்கர்குமார், ஈரோடு கே.உமாமகேஸ்வரி, நாமக்கல் சி.பூமணி, சுரேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


